டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல் - 637002.
தமிழாய்வுத்துறை

# இக்கால இலக்கியம்

தாள் குறியீடு : (23PTA01)

## தலைப்பு : மரபுக் கவிதை, புதுக்கவிதை அறிமுகம்

தயாரிப்பு:

முனைவர் அ. லதா,

உதவிப்பேராசிரியர்

http://www.trinitycollegenkl.edu.in/

# இக்கால இலக்கியம்

பாரதியாரும் அவருக்கு அடுத்து வந்தவர்களும் தொடங்கி இக்கால இலக்கியத்தின் எல்லையை அமைத்தல் பொருந்தும்.
செய்யுள் இலக்கியமேயன்றி உரைநடை இலக்கியமும் இவ்விலக்கிய வகையில்தான் வளர்ச்சிபெறலாயிற்று.
மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஐக்கூக் கவிதை எனப் பல வகைகளில் கவிதை சிறக்கும் காலகட்டம் இது.
இவ்விலக்கியத்தின் உருவம், உள்ளடக்கம், உத்திமுறை குறித்துப் படிப்பது, இனிப் படைப்பதற்கும் உதவியாகும் என்பதை நினைவிற் கொள்வோம்.

# மரபுக் கவிதை

கவிதை வகைமைகளில் தொன்மையானதாக அறியப்படுவது மரபுக் கவிதையாகும். தமிழில் உள்ள யாப்பிலக்கண நூல்கள் மரபுக் கவிதை இயற்றும் முறையை எடுத்துரைக்கத் தோன்றியனவேயாகும். யாப்பு வடிவத்திற்கு அடிப்படை **சந்தமும்** (Rhythm), **தொடை**யும் ( Rhyme) ஆகும். **சந்தம்** என்பது அழுத்தமான ஓசையும் அழுத்தமில்லா ஓசையும் சீர்பட அடுக்கி வருவதைப் பொறுத்தது. அழுத்தமுள்ள ஓசையும் அழுத்தமில்லாத ஓசையும் மாறி மாறி இடம்பெறுவதால் ஒரு நயமான ஓசை பிறக்கிறது. மரபுக் கவிதைகள் ஒரு காலத்தில் இசையோடு பாடப்பட்டிருக்க வேண்டும். பிற்காலத்தில் இவை படிக்கப்படுவனவாக மட்டுமே அமைந்து விட்டன. பாக்களின் ஓசை நயத்துக்குக் காரணமான சொற்களை அளவிட்டுச் சீர் எனக் குறிப்பிட்டனர்.

குறில், நெடில், ஒற்று என்னும் எழுத்துகளால் அசையும், அசையால் சீரும், சீரால் அடியும், அடியால் பாடலும் முறையே அமைகின்றன. சீர்களுக்கு இடையிலான ஓசை **தளை** எனப்படுகின்றது. சீர், தளை, அடி ஆகியவற்றின் வேறுபாட்டால் பா வகைகள் அமைகின்றன.

சீர்களின் முதலெழுத்து ஒற்றுமை - மோனை; இரண்டாம் எழுத்து ஒற்றுமை - எதுகை; இறுதியில் அமையும் ஒலி ஒற்றுமை - இயைபு; சொல், பொருள் ஆகியவற்றில் காணும் முரண்பாடு - முரண்; ஓர் அடியின் எழுத்தோ அசையோ சீரோ அடுத்த அடியின் முதலாக அமைவது அந்தாதி - எனப் பாடல்கள் தொடுக்கப்படுவது **தொடை** எனப்படும். அடுத்த பாடத்தில் (மரபுக் கவிதை வடிவம்) இவை குறித்து விரிவாக அறிந்து கொள்ளலாம்.

சங்க காலம் முதல் இருபதாம் நூற்றாண்டு வரையில் தமிழிலக்கிய நெடும்பரப்பில் செங்கோல் செலுத்தி வந்த பெருமை, மரபுக்கவிதைக்கே உரியது.

## புதுக்கவிதை உருவம்

***சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது***
***சொற்புதிது சோதி மிக்க நவகவிதை***

எனப் பாரதி அறுசீர் விருத்தத்தில் விடுத்த அழைப்புதான், புதுக்கவிதை வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் தூண்டுகோலாய் அமைந்தது.

சீர், தளை, அடி, தொடை என்னும் கட்டுப்பாடுகளை உடையது மரபுக்கவிதை. அக்கட்டுப்பாடுகளை உடைத்தது புதுக்கவிதை.

***புதுக்கவிதை என்பது***
***சொற்கள் கொண்டாடும்***
***சுதந்திரதின விழா***

எனவும்,

***புதுக்கவிதை எனும் போர்வாள்***
***இலக்கண உறையிலிருந்து***
***கவனமாகவே***
***கழற்றப்பட்டிருக்கிறது***

எனவும் குறிப்பிடுவார் வைரமுத்து.

## புதுக்கவிதைப் பொருண்மை

கவிதைக்குக் குண்டூசி முதல் இமயமலை வரை எப்பொருளும் பாடுபொருளாகலாம். புதுக்கவிதையும் இவ்வாறே எப்பொருளைக் குறித்தும் பாடப்பெறுவதாய் அமைகின்றது. தன்னம்பிக்கை, பாசம், நட்பு, காதல், இயற்கை, உழைப்பாளி, வறுமை, விலைவாசி, வேலையில்லாத் திண்டாட்டம், பெண்மை, கட்சி, அரசியல், விலைமகளிர், மதநல்லிணக்கம், உயிரிரக்கம் என்னும் பொருண்மைகளில் அமைந்த புதுக்கவிதைகளை இங்குக் காண்போம்.

## புதுக்கவிதை உத்திகள்

உணர்த்தும் முறையை ‘உத்தி’ என்று குறிப்பிடுவார்கள். கருத்தைப் புலப்படுத்த மொழியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டது ஓர் உத்திமுறை. மொழியில் இலக்கியத்தைத் தேர்ந்து கொண்டதும் உத்திமுறையே. இலக்கியத்துள் கவிதையைத் தேர்வு செய்ததும் உத்திமுறையே. அக்கவிதையுள்ளும் புதுக்கவிதையை எடுத்துக் கொண்டமையும் ஓர் உத்திமுறையேயாகும். அதனுள்ளும் கருத்துகளைப் படிப்போர் நெஞ்சில் விரைவாகவும் ஆழமாகவும் பதியுமாறு எடுத்துரைக்கும் பல்வேறு உத்திமுறைகள் அமைகின்றன. மரபுக்கவிதைக்கான உத்தி முறைகளைத் **தண்டியலங்காரம்** போன்ற அணியிலக்கண நூல்களின் வழி அறிந்து கொள்கிறோம். புதுக்கவிதைக்கு அவ்வாறான தனி நூல்கள் இல்லாவிடினும் பல்வேறு திறனாய்வு நூல்களின் வழி நம்மால் ஒருசில உத்திமுறைகளை உணர்ந்து படிக்கவும், படைக்கவும் முடிகின்றது.

உவமை, உருவகம், படிமம், குறியீடு, அங்கதம், முரண், சிலேடை, இருண்மை ஆகிய உத்திமுறைகள் புதுக்கவிதைகளில் பயன்படுத்தப் பெறுவதை இங்குக் காண்போம்.

தமிழில் உருவான மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகியவற்றின் தோற்றம் பெயர்க்காரணம், நோக்கம், படைப்பின் பரப்பு, வளர்ச்சி ஆகியன குறித்து இப்பாடத்தில் அறிந்துகொண்டீர்கள். இருவகைக் கவிதைகளின் உருவம், உள்ளடக்கம், உத்தி ஆகியன குறித்தும் அறிந்து கொண்டீர்கள். மரபுக்கவிதைக்கும் புதுக்கவிதைக்கும் இடையிலான வேறுபாடுகளை அறிந்து படைக்க இச்செய்திகள் உதவியாக அமைவன.

# நன்றி

http://www.trinitycollegenkl.edu.in/